**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.537/2019**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் 2,3,6-ம் எதிரிகள் ஆஜர். 1.4,5-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1.4, 5-ம் எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2024**

முதல்விசாரணை

நான் தற்போது வெள்ளோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 06.08.2018-ம் தேதி ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது, உதவி ஆய்வாளர் திரு.மணிமாறன் மற்றும் தலைமை காவலர் குழந்தைவேலு ஆகியோருடன் நானும், ஈரோடு மாவட்டத்தில் அத்தியாவசிய பண்டங்கள் பதுக்குதல் மற்றும் கடத்துதல் போன்ற குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு, மதியம் 13.30 மணிக்கு ஈரோடு கனிராவுத்தர் குளம், விநாயகர் கோவில் அருகே கண்காணித்தபோது, அங்கே ஒரு சிவப்பு நிற ஆம்னி, வெள்ளை நிற ஆம்னி இரண்டு வண்டிகள் இருந்தன. சிவப்பு நிற ஆம்னி கார்

TN 04 4181 காரில் சுமார் 50 கிலோ எடையுள்ள மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருந்தவர்கள், போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்ததும், சிலர் வெள்ளை நிற ஆம்னி காரில் தப்பி சென்று விட்டனர். சிவப்பு நிற காரின் அருகே நின்ற 3 நபர்களை பிடித்து விசாரிக்க, அவர்கள் 1.பவானியை சேர்ந்த பிரபு என்கிற அந்தியூர் பிரபு, 2.பிரகாஷ், த/பெ.சீனிவாசன், 3.கோபி, த/பெ.ராஜா என்றும், தப்பி சென்றவர்கள் பவானியை சேர்ந்த ராஜேஷ், த/பெ.தாமஸ், 2.ராஜேஷ்-ன் தம்பி டைனி தாமஸ், 3.பிரபு என்கிற ஒன்றைக்கண் பிரபு, த/பெ.செல்வராஜ் என்றும் கூறினார்கள். மேற்படி சிவப்பு நிற ஆம்னி காரை சோதனை செய்ய சுமார் 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகள் ரேசன் அரிசி இருந்தது. மேற்படி நபர்கள் அந்த அரிசியை எடுத்து செல்ல எவ்வித ஆவணமோ, உரிமமோ இல்லை என்று சொன்னார்கள். உதவி ஆய்வாளர் 14.00 மணிக்கு அவர்களை கைது செய்தும், அங்கிருந்த சாட்சிகள் ஈரோடு, வீரப்பன்சத்திரத்தை சேர்ந்த அருள் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் 14.10 மணி முதல் 15.10 மணி வரை ஒன்றைக்கண் பிரபுவிடமும், 15.10 மணி முதல் 16.10 மணி வரை பிரகாஷ் என்பவரிடமும், 16.10 மணி முதல் 17.10 மணி வரை கோபி என்பவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், மேற்படி சொத்துக்களை 17.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றியும், பின்னர் எதிரிகள் சொன்னதன் பேரில், பவானி, காந்தி நகர் செல்லும் வழியில் விநாயகர் கோவில் அருகில், சுமார் 50 கிலோ எடையுள்ள 8 மூட்டைகளையும், XL Super வண்டியையும், 18.00 மணிக்கு மகஜரில் கைப்பற்றினார். பின்னர் 20.00 மணிக்கு நிலையம் வந்து, குற்ற எண்.91/2018 சட்டப்பிரிவு 6(4) of TNSC (RDCS) Order 1982, r/w 7(i)(a)(ii) of EC

Act 1955-ன் படி வழக்கு பதிவு செய்தார். நான் உதவியாக உடன் இருந்தேன். அது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

ஒத்தி வைப்பு.